28.03.2025 S.C.No.138 of 2017 P.W.18 – Manikandan

(A1 to A6 present)

விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.20 P.M.

Crl.M.P.Nos. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்?

ப: டிப்ளோமோ இன் மெக்கானிகல் இன்ஜினியரிங் படித்துள்ளேன்.

கே: நீங்கள் தற்போது என்ன வேலை செய்கிறீர்கள்?

ப: தீவிர குற்றவாளிகள் தடுப்பு பிரிவில் பணி செய்கிறேன்.

கே: தற்போது எந்த பதவியில் பணியாற்றுகிறீர்கள் என்றால் ?

ப: Grade II Constable ஆக உள்ளேன்.

கே: 16.06.2015 அன்று உங்களுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா ?

ப: இருந்தது.

கே: அந்த ஓட்டுநர் உரிமத்தை சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா ?

ப: கொடுக்கவில்லை.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை வழக்கின் எதிரிகள் உயர் அதிகாரிகளின் ஆணைக்கிணங்க சிறப்புக்குழுவில் (Special Duty)ல் இருந்தார்கள் என்றால் ?

ப: 16.06.2015, 17.06.2015 Special duty ல் இருந்தார்கள் என்பது தெரியும். 18.06.2015, 19.06.2015 மற்றும் 20.06.2015 ஆகிய மூன்று தேதிகளில் நான் ஆய்வாளரின் அனுமதியோடு ஓய்வில் சென்றுவிட்டேன்.

கே: மேற்கண்ட Special duty–க்கு டிஎஸ்பி கணேசன் என்பவர்

பொறுப்பாளராக இருந்தார் என்றால் ?

ப: சரிதான்.

கே: 16.06.2015 இரவு Special duty செய்து முடித்துவிட்டு ஆய்வாளர் வண்டியை எடுத்துக்கொண்டு அவரது வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால்?

ப: சரிதான்.

கே: 17.06.2015 அன்று ஷமீல் பாஷாவின் உறவினர்கள் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் ?

ப: நிறைய பேர் இருந்தார்கள். அதனால் ஷமீல் பாஷாவின் உறவினர்கள் இருந்தது எனக்கு தெரியாது.

கே: 17.06.2015 Special duty க்கு டிஎஸ்பி கணேசன் அவர்கள் Instruction வாங்குவதற்கு வழக்கின் எதிரிகள் ஆம்பூருக்கு சென்றீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: வழக்கின் 2 முதல் 6 வரையிலான எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு உட்பட்டவர்கள் இல்லை என்றால் ?

ப: சரிதான். ஆம்பூர் Sub divisional–ல் எதிரிகள் 2 முதல் 6 வரை Crime தொடர்பான வழக்குகளை பார்த்து வந்தார்கள்.

கே: இந்த Sub divisional என்பது டிஎஸ்பி கணேசனுடைய Control ல் வழக்கின் எதிரிகள் பணி செய்தார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: டிஎஸ்பி கணேசன் அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள காவல் நிலையங்களில் பணி செய்ய தேவைப்படுமாயின் டிஎஸ்பி கணேசன் அவர்களின் அனுமதியோடு வழக்கின் எதிரிகள் அழைக்கப்படுவதுதான் முறை என்றால் ?

ப: சரிதான்.

கே: வழக்கின் எதிரிகள் டிஎஸ்பியின் ஆணைக்கிணங்க செயல்படுவார்களே தவிற பிற காவல் நிலையங்களில் உள்ள குற்ற

நிகழ்வுகளை குறித்து நேரடியாக விசாரணை செய்யும் அதிகாரம் என்றால் ?

ப: சரிதான்.

கே: 17.06.2015 அன்று மாலை டிஎஸ்பி கணேசன் அவர்கள் அழைத்ததின் பேரில் வழக்கின் எதிரிகளை டிஎஸ்பி அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றீர்கள் என்றால் ?

ப: 17.06.2015 அன்று காலை முதல் மதியம் வரை டிஎஸ்பி அலுவலகத்தில் வழக்கின் எதிரிகள் பணியாற்றினார்கள்.

கே: தாங்கள் ஓட்டிய வாகனத்திற்கு லாக்புக் / டைரி உள்ளதா என்றால் ?

ப: இருக்கிறது. ஆனால் நான் பராமரிக்கவில்லை.

கே: அதை யார் பராமரிப்பார்கள் என்றால்?

ப: தெரியவில்லை.

கே: வண்டியில் லாக்புக் / டைரி இருந்ததா என்றால்?

ப: தெரியவில்லை.

கே: சிபிசிஐடி உங்களை விசாரித்தார்களா என்றால் ?

ப: விசாரித்தார்கள்.

கே: எத்தனை நாட்கள் விசாரித்தார்கள் ?

ப: நான்கு நாட்கள் விசாரித்தார்கள். காலை 08.00 மணிக்கு வந்து இரவு 09.00, 10.00 மணியளவில் வீட்டிற்கு அனுப்புவார்கள்.

கே: நாங்கள் சொன்னபடி சொல்லவில்லை என்றால் போலீஸ் வேலைக்கு போக முடியாது என்று சிபிசிஐடி சொன்னார்கள் என்றால்?

ப: ஆமாம்.

கே: 17.06.2015 காலை முதல் இரவு வரை வாகனம் எங்கெங்கு சென்றன என்பது குறித்து வாகன லாக்புக் / Vehicle dairy–ல் பதிவுகள் செய்யப்பட வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: 15.06.2015 அன்று அணைக்கட்டு காவல் நிலையத்திலிருந்து வந்த

பிறகு உங்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு வழக்கின் 1ம் எதிரி ஆய்வாளர் தங்களை இறக்கிவிட்டுவிட்டு வாகனத்தை அவரே எடுத்துக்கொண்டு அவர் குடும்பத்துடன் காட்பாடியில் குடியிருக்கும் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் ?

ப: சரிதான்.

கே: 17.06.2015 அன்று இரவு டிஎஸ்பி கணேசன் அவர்கள் ஆணைக்கிணங்க டிஎஸ்பி அவர்கள் கொடுத்த பணியினை செய்வதற்காக குடியாத்தத்திற்கு வழக்கின் எதிரிகள் சென்றார்கள் என்றால்?

ப: போகவில்லை.

கே: 16.06.2015 மற்றும் 17.06.2015 தேதிகளில் பணி செய்த நேரம் எந்த ஆவணத்தில் பதிவு செய்யப்படும் என்றால் ?

ப: டியூட்டி ரோஸ்டரில் பதிவிடுவார்கள் என்பது தற்போது தெரியும். மேற்சொன்ன 16.06.2015 மற்றும் 17.06.2015 தேதிகளில் எந்த ஆவணத்தில் பதிவிடுவார்கள் என்பது எனக்கு தெரியாது.

கே: ஆவண எண் 38–ல் ரப் டியூட்டி ரோஸ்டரில் அ.த.சா.ஆ.31 முதல் பக்கத்தில் உங்கள் பெயர் இருக்கிறது என்றால் ?

ப: இருக்கிறது. எண் தவறாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொதுநாட்குறிப்பேட்டில் 17.06.2015 அன்று தங்களின் பெயரோ அல்லது YB எண்ணோ குறிப்பிட்டு என்ன பணி என்பது குறித்து எந்த தகவலும் பதியப்படவில்லை என்றால் ?

ப: சரிதான். டியூட்டி ரோஸ்டரில் என்னுடைய எண் 8805 என வரவேண்டும். ஆனால் 8804 என போட்டுள்ளனர்.

கே: 17.06.2015 அன்று பொதுநாட்குறிப்பில் தங்களின் பணி குறித்து பதிவு செய்திருக்க வேண்டும் என்றால் ?

ப: பொதுநாட்குறிப்பேட்டை பராமரிக்கின்ற விஷயம் எனக்கு தெரியாது.

கே: 18.06.2015, 19.06.2015 மற்றும் 20.06.2015 ஆகிய மூன்று நாட்களும்

ஆய்வாளரின் அனுமதியோடு ஓய்வில் சென்றுவிட்டிர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்கள் ஓய்வில் சென்றது குறித்து பொதுநாட்குறிப்பிலோ மற்றும் டியூட்டி ரோஸ்டரிலோ முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றால் ?

ப: அதைப்பற்றி எனக்கு தெரியாது.

கே: ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் சிபிசிஐடி சொல்லிக்கொடுத்தது போல்தான் சாட்சியம் அளித்தீர்கள் என்றால்?

ப: Police Statement ல் உள்ளதை நான் சொன்னேன்.

கே: சிபிசிஐடி கேட்டதற்கு இணங்க இந்த நீதிமன்றத்தில் நீங்கள் சாட்சியம் சொன்னீர்கள் என்றால் ?

ப: அவர்கள் ஏன் என்னிடம் அவ்வாறு கேட்கப்போகிறார்கள்.

கே: வழக்கின் எதிரிகள் டிஎஸ்பி கணேசன் அவர்கள் பணித்த பல்வேறு பணிகளில் இருந்தார்கள். அதனால் பள்ளிக்கொண்டா காவல் நிலைய வழக்குகள் எதையும் விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: டிஎஸ்பி கணேசன் அவர்கள் Special team போட்டிதிலிருந்து வழக்கின் எதிரிகள் டிஎஸ்பி கணேசன் அவர்கள் பணித்த பணிகளைத்தான் செய்ய வேண்டும் என்றால் ?

ப: எனக்கு இந்த கேள்வியைப்பற்றி எதுவும் தெரியாது.

## 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

2014ல் YB ஆக இருந்தேன். 26.02.2016 அன்று பணி நிரந்தரம் பெற்றேன். என்னுடன் சேர்ந்து மொத்தம் எத்தனை YB என்றால் ஒரு காவல் நிலையத்திற்கு மூன்று YB இருப்பார்கள். உமராபாத் காவல் நிலையத்தில் பணியாற்றினேன்.

உமராபாத்தில் முதல் பணி ஆணை பெற்று YB ஆக இருந்தேன். தற்காலிகமாக பணியாற்றிய உமராபாத் காவல் நிலையத்திலும், பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலும் என்னுடைய வருகைக்காக எந்த பதிவேட்டிலாவது பதிவிடுவது உண்டா என்றால் இல்லை. அதைப்பற்றி எழுத்தருக்குத்தான் தெரியும்.

எத்தனை நாட்கள் வேலை செய்தீர்கள் என்பதற்கான கணக்கை எழுத்தர்தான் வைத்திருப்பார் என்றால் சரிதான். பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் தற்காலிகமாக எத்தனை மாதம் வேலை செய்தேன் என்றால் நான்கு, ஐந்து மாதம் இருந்திருப்பேன். 2016ல் நான் நிரந்தர பணியில் நியமிக்கப்பட்டு உளுந்தூர்பேட்டைக்கு பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன்.

வேலூர் 15 பட்டாலியனில் நான் பணியமர்த்தப்பட்டேன். வேலூருக்கு 2016ல் 10ம் மாதத்தில் 15 பட்டாலியனில் பணியில் சேர்ந்தேன். 16.06.2015 ல் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் YB ஆக இருந்தேன். அங்கும் நான் தற்காலிக பணியில்தான் இருந்தேன். காவல் நிலையத்தில் நான் பணி பார்ப்பேன். ஜிடியில் பதிவு செய்வது பற்றி YB ஆக இருக்கும்போது எனக்கு தெரியாது.

16.06.2015 அன்று என்னுடைய பணியைப்பற்றி பொதுநாட்குறிப்பில் பதிவிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் பணியாற்றிவர்கள் யார் என்பது டைரி எப்படி பராமரிக்கிறார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் காவல் நிலையத்தில் யார்யார் இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும்.

உயர் அதிகாரிகள் யார்யாருக்கு என்ன போஸ்டிங் போடுகிறார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பயன்படுத்தும் வாகனத்தில் நாங்கள் எங்கு சென்றோம் என்ற விஷயங்களையெல்லாம் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்டு எந்த காவல் நிலையத்திற்கு உட்பட்டதோ அந்த காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரியிடம் நீங்கள் கொடுத்தாக வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு அப்போது தெரியாது.

16.06.2015 அன்று எங்கு சென்றோம் என்ற தகவலை டைரியில் பதிந்து கொடுத்திருக்க வேண்டும் என்றும் அப்படி கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே அது ஜிடியில் எழுதப்பட்டிருக்கும் என்றால் ஆய்வாளருடன் நான் அலுவலில் உள்ளதை ஜிடியில் எழுத வேண்டும் என்று நாங்கள் சொல்வதில்லை.

டிஎஸ்பி 17.06.2015, 18.06.2015, 19.06.2015 போட்ட Duty Allocation பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எஸ்பி, டிஐஜி அவர்கள் ஆம்பூர் டிஎஸ்பியிடம் குறிப்பிட்டு அனுப்பிய நபர்கள் யார்யார் என்று எனக்கு தெரியாது.

ஓட்டுநரான எனக்கு Vehicle diary entry ஏன் தேவை என்று தெரியுமா என்றால் தெரியாது. பொதுநாட்குறிப்பில் வாகனத்தை பயன்படுத்தியதற்கான குறிப்பு 17.06.2015 அன்று இல்லை என்றால்

நான் அன்று வண்டி ஓட்டினேன். 17.06.2015 அன்று நீங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணியில் இருந்திருந்தால் அது ஜிடியில் பதியப்பட்டிருக்கும், அன்றய தேதியில் எதுவும் பதிவாகாமல் இருப்பதால் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கான பணிக்கு அந்த வாகனம் பயன்படுத்தப்படவில்லை என்றால் அன்று நான் வாகனத்தை ஓட்டினேன். பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு தொடர்பில்லாத பணியில் நான் இருந்தேன் என்றாலும் சிபிசிஜடி சொல்லிக்கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.18 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.28 17:11:44 +0530